www.malankaralibrary.com

# மார்த்தாண்டத்தின் மாமேதை ஆயர் யூஹானோன் மார் கிறிஸோஸ்டம்

1998-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16ஆம் தேதி மார்த்தாண்டம் மறைமாவட்டத்தின் இரண்டாவது ஆயராக மேதகு ஆயர் யூஹானோன் மார் கிறிஸோஸ்டம் அவர்கள் அறிவிக்கப்பட்ட போது மனதிற்குள் பெரும் மகிழ்ச்சி தென்பட்டது. முதலாம் ஆண்டு பட்டம் திருவனந்தபுரத்தில் அமைந்துள்ள இளம் குருத்துவ மடத்தில் முதலாமாண்டு கற்கின்ற போது காலை நேரங்களில் தியான பயிற்சிகள் பல நிகழ்த்தி ஆன்மீக வளர்ச்சிக்கு வித்திட்ட மிகப்பெரிய மாமேதை தான் அவர். அவருடன் நீண்ட ஏழு ஆண்டுகள் ஆயரின் செயலராகவும் மறைமாவட்ட நிதிக்காப்பாளராகவும் இணைந்து பணிபுரிய இறைவன் அளித்த பெரும் பேற்றை எண்ணி மகிழ்கிறேன்.

ஜூலை மாத முதல் நாளில் மார்த்தாண்டம் மறைமாவட்ட ஆயராக நம் பேராலயத்தில் வைத்து பொறுப்பேற்றுக் கொண்ட ஆயர் அவர்களுக்கு மலங்கரை மறைமாவட்டங்களும் கலாச்சார இயக்கங்களும் குழுக்களும் பல்வேறு சிறப்பு வரவேற்பு நிகழ்வுகளை ஒழுங்குபடுத்தினர். ஆலய நிகழ்வுகள் மட்டுமல்ல மார்த்தாண்டம் சுற்றிய பகுதிகளில் சமூக அரசியல் சார்ந்த பல்வேறு நிகழ்வுகளில் ஆயர் அவர்கள் கலந்து கொண்டு இறை ஆசி வழங்கினார். குமரி கிறிஸ்தவ ஐக்கிய பேரவை என இணைந்து நடத்தக் கூடிய பல்வேறு கண்டனப் பேரணிகளிலும் பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்று மறைமாவட்டத்தின் பிரதிநிதித்துவத்தை மெய்ப்பித்து வந்தார்.

மறைமாவட்டத்தில் உள்ள இயக்கங்கள் மற்றும் நிறுவனங்களை அடிக்கடி சந்தித்து அவற்றின் நிர்வாக நிறைகுறைகளை ஆய்ந்தறிந்து அதன் பொறுப்பில் அமர்ந்திருக்கும் வழிநடத்துநர்களுக்கு தேவையான வழிகாட்டுதல்களை வழங்கியும் அவர்கள் செய்யும் நற்காரியங்களை உற்சாகமூட்டியும் தன் பணியை திறம்பட செய்து வந்தார்.

அடிக்கடி ஆயர் என்ற முறையில் அவர் முற்காலங்களில் அயராது பணி செய்து உழைத்த அமெரிக்க வாழ் நபர்களிடம் மீண்டும் அவர்கள் உள்ள உறவை வைப்பதற்காகவும் அந்த உறவின் உச்சக்கட்டமாக அவர்களிடமிருந்து நன்கொடைகளை திரட்டுவதற்காக வருடம்தோறும் அமெரிக்க நாடுகளுக்கும் அவ்வாறே ஐரோப்பிய மற்றும் ஆஸ்திரேலிய நாடுகளுக்கும் மறைமாவட்டத்தின் நன்மைக்காக பயணம் மேற்கொண்டு வந்தார்.

ஒவ்வொரு முறையும் பயணம் மேற்கொண்டு திரும்பி வருகின்ற போது மிகவும் குறைந்த அளவு நன்கொடையே ஆயினும் அவற்றை மகிழ்வோடு வாங்கி வருவார். குறிப்பாக ஒரு சில நபர்கள் 2 டாலர் அல்லது 5 டாலர் என்று நன்கொடைகளை வழங்கி இருக்கிறார்கள். ஒரு வாரத்திற்குள் அனைவருக்கும் நன்றி கூறி பதில் கடிதம் எழுதுவதும் அவரது வழக்கமாக இருந்தது. ஒவ்வொரு நபரும் கொடுத்திருக்கக் கூடிய நன்கொடையை எவ்வாறு அவர்கள் கஷ்டப்பட்டு அளித்துள்ளார்கள் என்பதை ஆயரின் செயலரான திரு வில்லியம் மற்றும் என்னிடமும் அடிக்கடி விவரித்து வந்தார்.

வருடந்தோறும் கிறிஸ்துமஸ் நிகழ்வுகள் கிறிஸ்து மார்த்தாண்டம் வட்டார ஐக்கிய கிறிஸ்தவ அமைப்பின் வழியாக நடத்தப்படும் கிறிஸ்துமஸ் நிகழ்வுகளில் அதிகமான ஈடுபாட்டுடன் உதவிகளை அவர் வழங்கி வந்தார் இத்தகைய உதவிகளை பெற்றுக் கொள்வதற்காக ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து வந்தார்கள். பல்வேறு நபர்கள் கிறிஸ்துமஸ் தினத்தன்று அவரிடமிருந்து கிறிஸ்துமஸ் பரிசுகளை ஆயர் இல்லத்திலிருந்து பெற்றுக் கொள்வதற்காக வந்து குவிந்த வண்ணம் இருந்தார்கள். இவ்வாறு வந்திருந்த ஏழை எளிய மக்களுக்கு பரிசுகள் வழங்குவது மட்டுமல்ல அவர்களது பசியைப் போக்க காலை உணவு வழங்கி திருப்தியுடன் அனுப்ப வேண்டும் என்று கூறியிருந்தார். இவ்வாறு மார்த்தாண்டம் வட்டார பகுதியில் உள்ள ஏழை மக்கள் கிறிஸ்துமஸ் தின நாட்களில் ஆயர் அவர்களின் உதவிகளை எண்ணி பெருமிதம் அடைவதும் நன்றி கூறுவதும் வழக்கமாகவே அமைந்திருந்தது.

ஆயராக தனது முதல் கிறிஸ்துமஸ் திருநாள் திருப்பலியையும் புத்தாண்டுத் திருப்பலியையும் மார்த்தாண்டம் பேராலயத்தில் நிகழ்த்தியவாறு தனது பணிகளை தொடர்ந்து செய்ய பேராலய மக்களோடு இணைந்து இறைவேண்டல் செய்தார்.

மார்த்தாண்டத்தின் இரண்டாம் ஆயர் யூஹானோன் மார் கிறிஸோஸ்டம்

www.malankaralibrary.com

பின்னர் ஒவ்வொரு ஆண்டும் பல்வேறு ஆலயங்களிலும் சிறு மற்றும் பெரிய மறைப்பணித் தளங்களிலும் கிறிஸ்துமஸ் மற்றும் துக்கவார திருழிபாட்டு நிகழ்வுகளை நடத்துவதில் ஆர்வம் கொண்டிருந்தார். பின்னர் ஞாயிற்றுக் கிழமைகளில் சிறப்பு நிகழ்வுகள் இல்லை எனில் தானாகவே முன்வந்து ஏதேனும் மறைப்பணித் தளங்களிலோ ஆலயங்களிலோ திருப்பலி ஒப்புக் கொடுத்து வந்தார். இஃது இறைமக்களோடு நெருங்கிய உறவை ஏற்படுத்த வழிவகுத்தது.

ஆயர் அவர்களோடு நெருங்கிய உறவில் இருந்த அமெரிக்கா மற்றும் வெளிநாடுகளில் உள்ள சிறப்பு விருந்தினர்கள் அடிக்கடி ஆயர் இல்லத்திற்கு வருவது வழக்கம். இத்தகைய விருந்தினர்களுக்கு அவர்கள் வாழ்ந்த நாட்டில் உள்ள அதே நிலையிலான தங்கும் வசதி என்பதை விட நம்மிடையே உள்ள எளிய தங்கும் வசதியை அமைத்துக் கொடுத்தால் போதும் என்று அவர் திட்டவட்டமாக இருந்தார். சிறப்பு விருந்தினர்களுக்கு சுற்றுலாத் தலங்களை காண்பிப்பதாக மட்டுமல்லாமல் மறைமாவட்ட பிறரன்புப் பணிகளையும் மறைமாவட்டத்தில் உள்ள ஏழை மக்களின் நிலைகளையும் இத்தகைய சிறப்பு விருந்தினர்களுக்கு அவர் காண்பித்துக் கொண்டிருந்தார்.

ஆண்டுதோறும் ஆயரின் பெயர் கொண்ட புனிதரின் திருநாள் நவம்பர் 22 ஆம் நாளில் மறைமாவட்டத்தில் உள்ள அனைத்து பகுதிகளில் இருந்தும் அனைத்து குழுக்களும் அனைத்து நிறுவன பொறுப்பாளர்களும் ஆயர் இல்லம் வந்து அவர்களுக்கு பெயருடன் வாழ்த்துக்களை மனமுவந்து தெரிவித்து வந்தார்கள். இவ்வாறு இவர்கள் கொண்டுவரக்கூடிய நன்கொடைகளை சேமித்து பிறரன்பு பணிகளுக்காக செலவிடும் வழக்கமாக இருந்தது. அவருடைய பெயர் விழாவுக்காக நன்கொடை வழங்குகின்ற நபர்கள் உதவிகள் தேவைப்பட்டால் அவர்களுக்கு மேலும் நன்கொடைகளை திருப்பி வழங்கி அவர்களது பணிகளை ஊக்குவித்து வந்தார்.

ஆயர் பதவியேற்றவுடன் மரியாயின் சேனையின் தமிழக உயர் அமைப்பான சென்னை செனாத்துஸ் மன்ற பொறுப்பாளர்களை சந்தித்தார். இதன் அடிப்படையில் மார்த்தாண்டம் மறைமாவட்டத்தை மையமாக வைத்து இவ்வியக்கத்தின் கொமீசியம் என்ற அமைப்பானது முதல்முறையாக 1999 ஆம் ஆண்டு ஜனவரி 5 ஆம் நாளில் ஆயர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. இவ்வாறு கூரியா என்ற நிலையிலிருந்து மரியாயின் சேனை இயக்கம் உயர்வு நிலை அடைந்தது.

வருடந்தோறும் ஏப்ரல் மாதம் 8ஆம் நாள் மறைமாவட்ட ஆயர் இலாறன்ஸ் மார் எஃப்ரேம் ஆண்டகையின் நினைவுத் திருநாளை வெகு விமரிசையாக கொண்டாடுவதற்கான பல்வேறு திட்டங்களை வகுத்து செயல்படுத்தி வந்தார். அவ்வாறு ஆயரின் நினைவு நாட்களில் பல்வேறு பங்கு மக்களால் அவரது கல்லறை நோக்கிய திருப்பயணம் நடத்தப்பட்டு வந்தது. அன்றைய நாளில் கருத்தரங்குகள் மற்றும் பொருட்காட்சிகளும் நடத்தப்பட்டன. பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.

கருமானூர், செருப்பாலூர், மங்காடு, காட்டுவிளை, பிலாங்காலை, பூந்தோப்பு, வாழோடு, செக்கிட்டுவிளை, நடைக்காவு, சூரியகோடு, பின்குளம், ஊரம்புவிளை, கண்ணக்கோடு, சேரோட்டுக்கோணம், குழித்துறை, மாத்தூர்க்கோணம், பீச்ரோடு, ஞானதாசபுரம், குமாரபுரம், பார்வதிபுரம், மந்தாரம்புதூர், கிறிஸ்துவிளாகம், மத்தியாஸ் நகர், முக்கடல், மற்றும் தேனிக்குளம் ஏறக்குறைய 20 க்கும் மேற்பட்ட ஆலயங்கள் அல்லது ஆலய பயன்பாட்டுக்கான கட்டிடங்கள் புதிதாக அமைக்கப்பட்டன. இவ்வாறு கட்டப்பட்ட புது ஆலயங்களுக்காக பங்கு மக்களும் தங்கள் பங்களிப்புத் தொகை வழங்குவது காட்டாயமாக்கப்பட்டிருந்தது. இத்தொகையானது 50 ஆயிரம் ரூபாயிலிருந்து ஆரம்பமாகி செல்லங்கோணம் ஆலயம் கட்டும் போது 25 லட்சம் ரூபாய் வரை மக்களின் பங்களிப்புத் தொகையாக மறைமாவட்டத்திற்கு செலுத்த வேண்டும் என்ற வரைமுறை உருவானது.

ஓலை மற்றும் ஓட்டுக் கட்டிடங்களாக இருந்த அனைத்து பள்ளிக்கூடங்களும் காங்கிரீட் மாற்றப்பட்டு புதிதாக வடிவமைக்கப்பட்டன. இவ்வாறே பங்குத்தந்தையர்களுக்கான பல தங்கும் கட்டிடங்களும் புதிதாக கட்டப்பட்டன. பல்வேறு பங்குகளில் பங்கு மக்கள் இணைந்து முயற்சிகள் மேற்கொண்ட ஆலய விரிவாக்கம் மற்றும் குருசடி கட்டுதல் போன்ற பணிகளுக்கு பங்குத்தந்தையர்களுக்கு

www.malankaralibrary.com

தகுந்த வழிகாட்டுதல்களை நல்கி வந்தார். அவ்வப்போது அப்பணிகளை சந்தித்து தேவையான கருத்துக்களை வழங்கி வந்தார்.

மறைமாவட்ட பேராலயத்தோடு இணைந்த பங்குத் தந்தையர்கள் தங்கும் இடத்தில் மறைமாவட்ட ஆயர் இல்லமும் அலுவலகமும் செயல்பட்டு வந்தது. அலுவலகத்திற்கு போதிய இடவசதி இல்லாமல் இருந்ததால் வெட்டுமணி தேங்காய்பட்டணம் சாலையில் தற்போது அமைந்திருக்கும் ஆயர் இல்ல வளாக கட்டிடம் ஒன்று வாடகைக்காக முதலில் பயன்படுத்தப்பட்டு வந்தது. தொடர்ந்து அந்த கட்டிடமும் இடமும் விலைக்கு வாங்கப்பட்டது. தொடர்ந்து அக்கட்டடத்தின் பின்பகுதியில் அரங்கமும் சமைலறையும் உணவறையும் அமைக்கப்பட்டது. பின்னர் முற்பகுதியில் பணியாளர்களுக்கான அலுவலகமும் அருட்தந்தையர்கள் தங்குவதற்கான இடமாகவும் வடிவமைக்கப்பட்டது.

மறைமாவட்ட இளங்குருத்துவ பயிற்சி நிலையம் முதலில் குழித்துறையில் நலவாழ்வுப்பணிக் கட்டிடத்தில் செயல்பட்டு வந்தது. குருத்துவ மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப போதிய இடவசதி இல்லாத காரணத்தினால் கன்னியாகுமரியில் மலங்கரை பவனில் அமைந்துள்ள இளையோர் மைய கட்டிடத்திற்கு செமினாரி மாற்றப்பட்டது. பல ஆண்டுகள் செமினரி அங்கு செயல்பட்டு வந்தது. இக்காலத்தில்தான் இலவுவிளையில் குருத்துவக் கல்லூரிக்காக தென்னை மரங்கள் அடங்கிய ஒரு விளைநிலப்பகுதி விலைக்கு வாங்கப்பட்டது. ஆயர் அவர்களின் தனிப்பட்ட முயற்சியால் குருத்துவக் கல்லூரியின் கட்டிடமும் அமைக்கப்பட்டு குருமாணவர்களும் தங்கள் பயிற்சியைத் தொடர்ந்தனர். இவ்விடத்தில் மார் எஃப்ரேம் பொறியியல் கல்லூரி துவங்க வேண்டிய சூழல் ஏற்பட்ட போது செமினாரி இவ்வளாகத்திலேயே கீழ்பகுதிக்கு மாற்றப்பட்டது.

கன்னியாகுமரி மலங்கரை பவன் வளாகத்தில் இறையூழியர் மார் இவானியோஸ் தங்கியிருந்த பழைய ஓட்டுக் கட்டிடமும் சிற்றாலயமும் இளையோர் நல மையக் கட்டிடமும் அமைந்திருந்தது. கன்னியாகுமரி சுற்றுலாத்தலமாக வளர்ந்த சூழலில் நம் வளாகத்தில் மற்று பயன்படுத்தாத பகுதிகளில் அரசு வளர்ச்சிப் பணிக்காக நிலம் கையகப்படுத்த திட்டமிட்டதை அறிந்த ஆயர் உடனடியாக மார் இவானியோஸ் Animation Centre என்ற கட்டிடத்தை உருவாக்கினார். இக்கட்டிடத்தில் தான் தற்போது புனித பவுல் IAS நிறுவனம் செயல்பட்டு வருகிறது.

ஆலயங்களின் எல்லைகளைப் பிரித்தும் புதிய மறைப்பணித்தளங்களைக் கண்டறிந்தும் புது ஆலயங்கள் பல அமைக்கப்பட்டன. சற்று அளவில் பெரிதாகவும் நன்முறையிலும் வடிவமைக்கும் போது புது ஆலய விசுவாசிகளுக்கு தன்னம்பிக்கை ஏற்படும் என்ற கருத்தை வலியுறுத்தியே புது ஆலயக்கட்டிடங்கள் சற்று பெரிதாக அமைக்கப்பட்டன. இவ்வாறு உருவாக்கப்பட்ட பூந்தோப்பு, சேனம் விளை, கடுவாக்குழி, பல்லுகுழி, ஊரம்புவிளை, பெருவழிக்கடவு, சீறோபாயின்டு, சேறோட்டுக்கோணம், கோணம், ஞானதாசபுரம், மத்தியாஸ்நகர், கீழ்மாங்கோடு, புலியூர்சாலை, ஜார்ஜ் நகர், வெள்ளச்சிப்பாறை, செக்கிட்டுவிளை மற்றும் கிடாரக்குழி போன்ற ஆலயங்கள் இதற்கு சான்றாகும்.

கிராத்தூர் மற்றும் மரியாகிரியில் அமைந்துள்ள ஆங்கில வழி பள்ளிக்கூடங்களுக்கு முற்றிலும் புதிய கட்டிடங்கள் உருவாக்கப்பட்டு தன்னம்பிக்கையோடு வெற்றி நடை போட்டுக் கொண்டிருந்தன. மரியாகிரியில் அமைந்துள்ள மலங்கரை கத்தோலிக்க கல்லூரியின் துவக்க காலங்களில் அதன் வளர்ச்சிக்கு திட்டங்கள் பல வகுத்து வந்தார். கிராத்தூரில் அமைந்துள்ள மார் கிறிஸோஸ்டோம் கல்வியியல் கல்லூரிக்கு அனுமதி வழங்கி அதன் செயல்பாடுகளையும் கவனித்து வந்தார். மார் எஃப்ரேம் பொறியியல் கல்லூரி துவங்க உடனடி கட்டமைப்புத் தேவையை உணர்ந்து செமினரிக் கட்டிடத்தையே அதற்காக வழங்கி கல்லூரியாலேயே செமினரிக்காக புதுக் கட்டத்தை கட்டிட வழி செய்தார். இம்மூன்று கல்லூரிகளுக்கும் ஆயர் அவர்களுக்கு உறுதுணையாக அருட்தந்தை பிரேம் குமார் அவர்கள் செயல்பட்டு வந்தார்.

மறைமாவட்டத்திற்கென மிட்ஸ் என்ற சமூக நலப்பணி மையம் முதலில் மார்த்தாண்டம் பேராலய வளாகத்தில் நிறுவப்பட்டது. பின்னர் கழுவன்திட்டை பகுதியில் அலுவலக் கட்டடம் அமைக்கப்பட்டு குமரி மாவட்டம் முழுவதும் இதன் பணிகள் நடைபெறுமாறு துரிதப்படுத்தப்பட்டன. கோள்பிங் இயக்கம், சேவ் ஏ பேமிலி,

www.malankaralibrary.com

தளிர்கள் உலகம், சுய உதவிக் குழுக்கள் என பல செயல்பாடுகள் நடைபெற்று வருகின்றன. மிட்ஸ் நிறுவனத்தின் கீழ் கன்னியாகுமரி சமூக் கல்லூரியும் செயல்பட்டு வருகிறது. கோள்பிங் இயக்கத்தினரும் மரியாயின் சேனை இயக்கத்தினரும் இணைந்து அக்டோபர் மாத இறுதி ஞாயிறன்று மாபெரும் செபமாலைப்பவனி நடைபெற்று வந்தது. ஆயர் அவர்கள் இந்நிகழ்வினில் கலந்து கொண்டு இறை ஆசீரையும் உடனிருப்பையும் வெளிப்படுத்தி வந்தார்.

ஆயர் இலாறன்ஸ் மார் எஃப்ரேம் துவங்கிய ஹெல்த் பார் ஒன் மில்லியன் என்ற திட்டத்தை மையமாக்கி நல வாழ்வுப் பணிகளை குழித்துறையில் அருட்தந்தை மரிய அற்புதம் அவர்கள் தலைமையில் தொடர்ந்திட வழிவகுத்தார். பல்வேறு மக்கள் நலப்பணிகள் திட்டமிட்டு செயல்படுத்தப்பட்டு வந்தன. இவற்றில் முக்கியமான சுய உதவிக்குழுக்கள், ஏழைப்பெண்களுக்கான திருமண உதவி திட்டம், மார்த்தாண்டம் மெடிக்கல் மிஷன் போன்றவை நன்முறையில் இப்போதும் செயல்பட்டு வருகின்றன. மனவளர்ச்சி குன்றியோருக்கான பயிற்சிப் பள்ளிக்கூடமும் தலைசிறந்த பணிகளுள் ஒன்றாக அமைந்துள்ளது.

முக்கம் பாலையில் அமைந்துள்ள இரப்பர் தோட்டத்திற்கு மார்த்தா எஸ்டேட் என பெயரிடப்பட்டிருந்தது. தொடர்ந்து ஒவ்வொரு தோட்டத்திற்கும் பல்வேறு பெயர்களை வழங்கியிருந்தார். வாழக்குழியில் அமைந்துள்ள தோட்டத்திற்கு செயின்ட் எஃப்ரேம் தோட்டம் எனவும், அணக்கரையில் அமைந்துள்ள ரப்பர் தோட்டத்திற்கு அமலா எஸ்டேட் எனவும், மஞ்சத்தோப்பில் அமைந்துள்ள தென்னந்தோப்புக்கு மார் இவானியோஸ் ஃபார்ம் எனவும், வள்ளவிளையில் அமைந்துள்ள தென்னந்தோப்புக்கு மார் பசேலியோஸ் ஃபார்ம் எனவும், செல்லங்கோணத்தில் அமைந்துள்ள தோட்டத்துக்கு மாதாமலை எஸ்டேட் எனவும் பெயரிட்டார்.

ஆயர் அவர்களின் பத்தாண்டு கால ஆயர்பணி நிறைவை முன்னிட்டு பள்ளிகள் ஆலயங்கள் என 10 நிறுவனங்களுக்கு **TENTH EPISCOPAL YEAR OF MAR CHRYSOSTOM EDUCATION ENDOWMENT (TEYMAC)** என்ற பெயரில் ரூபாய் ஐம்பதாயிரம் வீதம் நிரந்தர வைப்பு நிதி உருவாக்கப்பட்டது. அவ்வாறே ஆயரின் அருட்பணிகளுக்கு புகழ் சேர்க்கும் வகையில் சாலோம் ஹோம் கிராத்தூரில் நிறுவப்பட்டது.

நமது மறைமாவட்டத்திலிருந்து முறைப்படியாக திண்டிவனம் முப்பணிக் கழகம் மற்றும் திருவனந்தபுரம் போத்தன்கோடு சென்று முறையாக இறையியல் கற்றுத் தேர்ந்த வேதியர்களை மறைமாவட்ட மறைபரப்புப் பணிகளுக்காக பயன்படுத்த துவங்கினார். மேலும் மறைபணிக்காக ஆர்வம் கொண்ட பலரையும் இக்குழுவினில் சேர்த்து மறைபணி செய்யும் ஆர்வத்தை தூண்டிவிட்டார். இவர்கள் அனைவரையும் சீர்படுத்தி மறைமாவட்ட பணிகளுக்காக மறைமாவட்ட நற்செய்தி அறிவிப்பு பணிகளுக்காக பயன்படுத்தத் துவங்கினார். பெரிய பங்குகள் சிறிய மறைபணித்தளங்களை தத்தெடுக்கும் முறைகளையும் அறிமுகப்படுத்தினார்.

குருக்களோடு அவர் நெருங்கிய உறவைக் கொண்டிருந்தார். திடீர் வருகையால் அடிக்கடி குருக்கள் இல்லத்தில் அவர்களை சந்தித்து அவர்களது நிறை குறகளை கேட்டறிந்து அவர்களுக்கு தேவையான உதவிகளைச் செய்து வந்தார். நோயால் வாடும் குருக்களை சந்தித்து மறைமாவட்ட வாகனத்திலேயே மருத்துவமனைக்கு அழைத்து சென்று மருத்துவ உதவிகள் வழங்கவும் நேரடியாக சென்று நலம் விசாரிக்கும் வழக்கத்தைக் கொண்டிருந்தார். குருக்கள் ஏதேனும் பிரச்சனைகளுக்கு உட்பட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டபோது அவர்களை தனியாக சந்தித்து அவர்களுக்கு தேவையான அன்பையும், ஒரு தந்தையின் அரவணைப்பையும் பாச உணர்வையும் காண்பித்து வந்தார்.

குருக்களும் இறைமக்களும் ஆயரோடு உறவிலும், ஒன்றித்த செயல்களிலும் நிலைத்திருந்தனர். அதற்கு மிகப்பெரிய ஒரு தெளிவு தான் மலங்கரை கத்தோலிக்க சங்கமம் மறைமாவட்டத்தில் வைத்து நடைபெற்ற போது ஒவ்வொருவரும் அவர்களுக்கு ஏற்ற முறையில் அதிகமாக ஒத்துழைப்புக் கொடுத்து அந்த நிகழ்ச்சியின் மாபெரும் வெற்றிக்கு சான்று பகர்ந்தனர். இவ்வாறு கருத்து வேறுபாடுகள் பல இருந்தன என்றாலும் மறைமாவட்ட ஒன்றிணைந்த வளர்ச்சி பணிகள் செய்கின்ற போது அனைத்து குருக்களும் அருட்கன்னியர்களும் அனைத்து

www.malankaralibrary.com

இறைமக்களும் மறைமாவட்டம் வளர வேண்டும் என்ற நிலையில் சிறப்பாக இணைந்து செயல்பட்டுக் கொண்டிருந்தனர். இதற்கெல்லாம் காரணம் ஆயர்கள் அவர்களின் பாச உணர்வே காரணம்.